பக்கங்கள்: 08 விலை : 20/-
காலைக்கதிர் Kālaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 11 வியாழக்கிழமை 25.06.2020 கதிர் 100



## வடக்கு - கிழக்கில் தேசியக் கட்சிகள் வாக்கு கேட்பதா?

### கொதிக்கிறார் சிவஞானம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 25

தமிழர்களின் அனைத்து விடயங்களிலும் காலை வாரும் செயற்பாட்டைமுன்னெடுக்கும் தென்னிலங்கைத் தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடம் வாக்குக்கேட்பதற்கு அருகதை அற்றவை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

வடக்கு- கிழக்கில் தென்னிலங்கையைச் சேர்ந்த தேசியக் கட்சிகளின் ஆதிக்கம் தொடர்பில் இன்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2

# கூட்டமைப்பு வெற்றிநடை; இருபது ஆசனங்கள் உறுதி

## தலைவர் சம்பந்தன் சூளுரை



(அப்துல் சலாம் யாசீம்)

திருமலை, ஜூன் 25

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி நடை போடும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## சைக்கிள் அணி வேட்பாளர் சம்பந்தன் பக்கம் பாய்ந்தார்



யாழ்ப்பாணம், ஜூன் 26

சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பட்டியலில் போட்டியிடும் திருகோணமலை வேட்பாளர் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

திருகோணமலையில் கூட்டமைப்பை எதிர்த்து தனியாகக் களமிறங்கியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளரான பேரின்பவரதன் - லக்ஸ்மன் என்பவரே கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான இரா.சம்பந்தனை நேரில் சந்தித்து தனது

2

## யாழ்.சுகாதார பணிப்பாளராக மீண்டும் வந்தார் தேவநேசன்

### தேர்தல் ஆணைக்குழு தலையிட்டதால்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக வைத்தியர் ஆ.தேவநேசன் 75 நாள்களுக்குப் பின்னர் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலையீட்டை தொடர்ந்து, வடக்கு சுகாதார சேவைகள்

2

## ஜூலை இரண்டாம் வாரத்தில் கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்!

கொழும்பு, ஜூன் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் வடக்கு மக்கள் மிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவு பெருகி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2

## தமது தேவைக்கேற்ப நீதி வழங்கும் அரசு அரசியல் கைதிகளைப் புறக்கணிக்கிறது!

### சாடுகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 25

உங்களது தேவைக்கேற்ப நீதியை உங்களால் வழங்கமுடியுமாக இருந்தால் சிறையில் இருக்கும் கைதிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம் காட்டுகின்றீர்கள்?

- இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## கருணாவை கைது செய்!

### உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூன் 25

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் தமிழர் மகாசபையின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனைக் கைது செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில்

2

## சோதனைச் சாவடியைப் பந்தாடியது பவுசர்!



மன்னார், ஜூன் 25

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்குள் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான கழிவு அகற்றும் பவுசர் புகுந்ததால் அந்த முகாம் முற்றாகச் சேதமாகியது.

இன்று வியாழக்கிழமை நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் நகர சபைக்குச் சொந்தமான கழிவு அகற்றும் பவுசர் மன்னார் நகரில் கழிவுகளைச் சேகரித்து

2




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வடக்கு – கிழக்கில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மிசுருவில் பகுதியில் தமிழர்களை கொடூரமாக சித்திரவதை செய்து கொன்றொழித்த இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. அவர்களுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. எனினும் தண்டனை விதிக்கப்பட்டுச் சில காலங்களிலேயே சிறையில் இருந்த இராணுவ அதிகாரி ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் 25 வருடங்களுக்குமேலாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் மீது எவ்வித வழக்கு விசாரணைகள் இன்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் பிள்ளைகள் தாயை இழந்து அநாதரவாக இருக்கின்றபோதும் இன்று வரை தென்னிலங்கை அரசு அவரை விடுவிப்பதற்கு மறுத்து வருகின்றது. ஆனந்த சுதாகரனின் விடுதலையை தென்னிலங்கை தேசியக் கட்சிகள் கூட வலியுறுத்தி அழுத்தம் கொடுக்க முன்வரவில்லை.

தமிழர்களுக்கு ஒரு நீதி, இராணுவத்தினருக்கு ஒரு நீதி என்றே இந்த நாடு பயணிக்கின்றது. தமிழர்களின் இனப்பிரச்சினையில்கூட சிங்கள அரசு அக்கறையற்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. கடந்த நல்லாட்சி அரசிலும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெற்றது.

அந்தப் புதிய அரசமைப்பு பல தடைகளையும் தாண்டி நிறைவேற்றுவதற்கு தமிழர் தரப்புக்கள் முயற்சித்த போதும் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியும் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதமரும் இதற்குத் தாங்கள் பொறுப்பில்லை என்று கைவிரித்து விட்டார்கள்.

இவ்வாறு தமிழர்களின் அனைத்து விடயங்களிலும் காலை வாரும் செயற்பாட்டை முன்னெடுக்கும் தென்னிலங்கைத் தேசியக் கட்சிகள் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு அருகதை இல்லை - என்றார்.

## கூட்டமைப்பு வெற்றி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்தாவது:-

வடக்கு, கிழக்கிலுள்ள 5 தேர்தல் மாவட்டங்களில் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தலை விடவும் 20 ஆசனங்களைப் பெறும்.

தமிழ் பேசும் மக்கள் வாக்குகளைப் பிரிக்காமல் ஒரு குடையின் கீழ் தங்கள் வாக்குகளை அளித்து சர்வதேசத்துக்கு ஒரு நல்ல செய்தியை எடுத்துக் காட்ட வேண்டும்.

இன்று தமிழ் மக்களுக்கான சரியான ஓர் அரசியல் தீர்வைப் பெறவேண்டிய சந்தர்ப்பத்தில் நாங்கள் இருக்கின்றோம். இதையெல்லாம் எல்லாத் தலைவர்களும் அதாவது மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சஜித் பிரேமதாஸ, மைத்திரிபால சிறிசேன ஆகிய தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆகவே, இம்முறை எந்த அரசு வந்தாலும் சேர்ந்து செயற்படத் தயார். கடந்த காலங்களில் நான் ஏற்கனவே கூறிய அரசியல் தலைவர்கள் உறுதிமொழி தந்துள்ளார்கள்.

புதிய சாசனம் உருவாக்கப்படவேண்டும் என அனைத்தும் பதிவில் உள்ளன. சர்வதேச நாடுகளிடம் இது பதிவில் உள்ளது. ஆகையால் எந்த அரசு வந்தாலும் நமக்கு சரியான தீர்வைத் தரவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## தமது தேவைக்கேற்ப நீதி வழங்கும் அரசு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில நாள்களுக்கு முன்பு கருணா அம்மான் ஓர் கூட்டத்தில் பேசுகின்றபோது, தான் கொரோனா வைரஸிலும் விடப் பயங்கரமானவன் என்றும் ஆனையிறவு போன்ற தாக்குதல்களில் 3000 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொலை செய்தேன் என்றும் பெருமை பேசிக் கொண்டார்.

உடனடியாகவே எதிர்க்கட்சிகள் மற்றும் சிங்கள பௌத்த இனவாதக் குழுக்கள் கருணாவின் பெருமைமிகு கருத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கின.

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரபல தலைவர்களான சஜித் பிரேமதாஸ உட்பட்ட மக்கள் சக்திப் பிரபலங்கள், ஜே.வி.பியினர், இராவண பலய போன்ற பல பேர் இது தொடர்பான கண்டனங்களைத் தெரிவித்து கருணாவைக் கைது செய்யுமாறு கோரினர்.

ஆனால் ஆளும் கட்சியினர் அவருக்காக வக்காலத்து வாங்கினர். கருணாவின் தகவல்களைக் கொண்டே புலிகளை அழித்ததாகவும், அவர் காப்பாற்றப்பட வேண்டியவர் எனவும் ஆளும் தரப்பில் இருக்கக் கூடியவர் குரல் கொடுத்து வருகின்றனர்.

கருணாவின் வரலாறு இரகசியமானதல்ல என்று பிரதமரும், எதிர்க் கட்சியினருக்கு பதிலடி கொடுத்துள்ளார். ஏற்கனவே கருணா என்பவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராகவும், பிரதி அமைச்சராகவும் மஹிந்த தரப்பினரால் அழகு பார்க்கப்பட்டவர்தான். அதுமாத்திரமல்லவிடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வந்த கே.பி. என்பவருக்கும் தேவைக்கு மேலதிகமாகச் சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட்டு அவரும் இன்றுவரை அரசினால் பராமரித்து வரப்படுகின்றார்.

உங்களது தேவைக்கேற்ப நீதியை உங்களால் வாங்கமுடியுமாக இருந்தால் சிறையில் இருக்கும் கைதிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம் காட்டுகின்றீர்கள்? சிலர் பாரதூரமான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களை விடுவிக்கமுடியாது, ஏனையோரைப்பற்றி சட்டமாஅதிபர் திணைக்களம் ஒப்புதல் தரவேண்டும் போன்ற பல சாட்டுக்களை கடந்த பத்து வருடங்களாகக் கூறி வருகின்றீர்கள். ஆனால் சிறையில் இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும் 15 வருடத்துக்குமேல் சிறையில் வாடுகின்றனர். இவர்கள் யாரும் தாமாக விரும்பி வன்முறையில் ஈடுபட்டவர்களல்லர். அவர்களை வழி நடத்தியவர்களில் உத்தரவுகளைச் செயற்படுத்தியவர்களே அவர்கள். உங்கள் பார்வையில் அவர்கள் குற்றமிழைத்ததாகக் கருதப்பட்டாலும் தமது மக்களின் உரிமைகளுக்காகவே செயற்பட்டனர். - என்றார்.

## யாழ்.சுகாதார பணிப்ப.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பாளர், இதற்கான நியமனக் கடிதத்தை வழங்கியிருந்தார்.

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகப் பணியாற்றிய அ.தேவநேசன் கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி முதல் ஊர்காவற்றுறை வைத்தியசாலைப் பணிப்பாளராகவும், மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் அதிகாரியாகப் பணியாற்றிய குமாரவேள் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டமையுடன் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் பணிப்பாளராக இருந்த திலீபன் மாவட்ட திட்டமிடல் அதிகாரியாகவும் இடமாற்றப்பட்டனர்.

வடக்கு சுகாதார சேவைகள் திணைக்களத்துக்குள் சில காலமாக நிலவிய பனிப்போரின் விளைவாக இந்த இடமாற்றம் நிகழ்ந்ததாகக் கருதப்பட்டது. கொரோனா தடுப்பு நடவடிக்கையில் போதிய ஒத்துழைப்பை தேவநேசன் வழங்கவில்லையெனக் குறிப்பிடப்பட்டு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அவர் இடமாற்றப்பட்டிருந்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த இடமாற்றம் நிகழ்ந்தது.

தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்ய முடியாதென்ற விதிமுறையை மீறி இடம்பெற்ற இந்த இடமாற்றத்துக்கு எதிராக வைத்தியர் ஆ.தேவநேசன் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட்டார்.

இதையடுத்து இந்த விடயத்தில் தலையிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு, விதிமுறையை மீறி இடம்பெற்ற தேவநேசனின் இடமாற்றத்தை இரத்துச் செய்தது. இதற்கான அறிவித்தல் சில வாரங்களுக்கு முன்னரே வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், இதில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருந்தது.

இந்த நிலையில் இன்று, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்படும் கடிதம் வைத்தியர் ஆ.தேவநேசனுக்கு, வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டது.

## ஜூலை இரண்டாம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுகாதார அறிவுறுத்தல் காரணமாக பெரிய அளவில் பிரசாரக் கூட்டங்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறிய கூட்டங்களை நடத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தத் தேர்தல் வித்தியாசமானதாகக் காணப்படுவது போன்றே வடக்கில் பல்முனைப் போட்டியாகவே காணப்படுகின்றது.

ஆனால் வடக்கு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான நம்பிக்கை இழக்கவில்லை. வடக்கில் ஆகக் கூடுதலான ஆசனங்களை நிச்சயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுவது உறுதி எனவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

தேர்தலுக்கென கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதில் உயர் மட்டம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

தமிழினத்தின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம், வடக்கில் வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டம், வடக்குப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டம் உட்படபல்வேறு பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இந்த விஞ்ஞாபனம் காணப்படுமென சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

## சைக்கிள் அணி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

## கருணாவை கைது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆனையிறவில் 3000 இராணுவத்தினரை ஒரே இரவில் கொன்றார் என நாவிதன்வெளி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கருணா ஆற்றியிருந்த உரை தென்னிலங்கையில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக வாக்கு மூலமொன்றைப் பெறுவதற்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு விடுத்திருந்த நிலையில் இன்று அவர் விசாரணைக்காக முன்னிலையாகியுள்ளார்.

இதனிடையே அவரைக் கைது செய்யவேண்டும் எனக் கோரி சிவில் ஆர்வலர்கள் என்று தன்னை அடையாளப்படுத்திய சிலர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

# பரீட்சைகள் குறித்து விரைவில் அறிவிப்பு

க.பொ.த. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதி மற்றும் பரீட்சைகளை நடத்துவதற்கான முறைகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உரிய துறைகளைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி திகதியை தீர்மானிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்திருக்கின்றார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி அமைச்சுக்கு அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் தொடர்பாக தெளிவுபடுத்தும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் பிரத்தியேக வகுப்புகளுக்கு மேலதிகமாக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வசதிகள் குறித்து ஆராயுமாறு சுகாதரா அமைச்சருக்கு ஜனாதிபதி இதன்போது பரிந்துரை விடுத்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் நேற்று 284 பேர் தனிமைப்படுத்தல்

அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து வந்த 284 பேர் வவுனியாவில் அமைந்துள்ள இரு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மீள முடியாமல் அமெரிக்காவில் சிக்கியிருந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்டவர்களில் 184 பேர் இராணுவப் பாதுகாப்புடன் இன்று அதிகாலை அழைத்து வரப்பட்டு பெரியகட்டு இராணுவ முகாமில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமில் கொரோனா பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், சிங்கப்பூரில் சிக்கியிருந்தவர்களில் இலங்கை அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்ட 100 பேர் இன்று அதிகாலை வவுனியா, பம்பைமடு இராணுவ முகாமில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமிற்கு இராணுவ பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைத்துவரப்பட்டு இருதனிமைப்படுத்தல் முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ள 284 பேரையும் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கவுள்ளமையுடன், அவர்களிடம் பி.சீ.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ - 100)

## சோதனைச் சாவடி.............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாப்பா மோட்டைப் பகுதியில் உள்ள மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மீள் சுழற்சி நிலையத்துக்கு கொண்டு சென்றது.

இதன்போது கட்டுப்பாடை இழந்த வாகனம் மன்னார் பிரதான பாலத்திற்கு அருகில் பிரதான இராணுவச் சோதனை சாவடி மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது சோதனைச் சாவடிக்கு என வீதியில் அமைக்கப்பட்ட இராணுவ வீதித் தடைகள் தூக்கி வீசப்பட்டதுடன், சோதனைச் சாவடியில் வாகனங்கள் பதிவு செய்யப்படும் பகுதி முற்றாகச் சேதம் அடைந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தனின் அபத்தக் கருத்து

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் கற்றிந்த சமூகத்தவர்கள். படித்தவர்கள். எழுந்தமானமாகக் கருத்துக்களைக் கூறி அவர்களை நம்ப வைக்க முடியாது. இலகுவில் ஏமாந்து விடக் கூடிய அப்பாவிகளோ முட்டாள்களோ அல்லர் அவர்கள்.

ஆனால் நம் அரசியல் தலைவர்கள் பலரும் நம் மக்கள் குறித்து அப்படித்தான் கருத்து நிலைப்பாட்டை வைத்திருக்கின்றார்கள் போலும். எதையும் ஆராய்ந்து பார்க்கலாம் அவர்கள் அப்படியே உள்வாங்கிக் கொள்வார்கள் – விழுங்கிக் கொள்வார்கள் – என்ற எண்ணத்தில்தான் அத்தலைவர்கள் கருத்து வெளியிடுகின்றார்கள் போலும்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ள கருத்து இத்தகைய நிலைப்பாட்டையே எமக்குத் தந்து நிற்கின்றது.

*“வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஒரே தெரிவு தமிழ்க் கூட்டமைப்பே. அதை இந்தத் தடவையும் எமது மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள். கூட்டமைப்பை விமர்சித்துக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் மக்கள் பாடம் புகட்டியே தீருவார்கள். ஏனெனில் அந்தக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக அரசின் ஆதரவுடன் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டவையாகும்.”* – என்று ஒரு கண்டுபிடிப்புடன் அவர் அறிவிப்பு ஒன்றைப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார்.

தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலத்தில் இருந்து நம் மத்தியில் ஒரு பண்பு வளர்த்து வந்துள்ளது.

தமது தரப்பில் சேராத – இணையாத – சேர்ந்து இயங்காத – அனைவரையும் ‘துரோகி’ என்ற பட்டம் கொடுத்து அழைப்பதாகும்.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னரும் கூட அந்தக் கலாசரம் முடிவுக்கு வரவில்லை. வெளிப்படையாக ‘துரோகி’ என்று பெயரிட்டு குற்றம் சுமத்தாவிட்டாலும் அப்படியான ஒரு பாணியில் அடையாளப்படுத்த முயலும் பண்பியல்பு தொடரவே செய்கின்றது.

அந்தப் பரவணிப் பழக்கம் தமிழர் தரப்பில் மிகப் பழுத்த அரசியல் தலைவரான சம்பந்தனையும் விட்டு வைக்கவில்லைப் போலும். துரோகிப் பாணியில் குற்றம்சாட்டும் பேச்சைத்தான் அவரும் வெளியிட்டு வருகின்றார்.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் முன்னாள் விடுதலைப் புலிகள் ‘ஜனநாயகப் போராளிகள் கட்சி’ என்ற கட்டமைப்பை உருவாக்கி தமிழ்க் கூட்டமைப்பை அணுகியபோது, எங்கே வேட்பாளர் பட்டியலில் அவர்களும் இடம் கேட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்களை புலனாய்வுப் பிரிவினர் உருவாக்கியவர்கள் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர் எனத் தெரிவித்துத் தட்டிக் கழித்தவர் இதே சம்பந்தன்தான்.

பின்னர் அதே ஜனநாயகப் போராளிக் கட்சியை இப்போது மடியில் தூக்கி வைத்திருப்பதும் அவரது கூட்டமைப்புத்தான்.

2015 பொதுத் தேர்தலில் கூறிய அதே பாணிக் குற்றச்சாட்டைத் தான் அவர் இப்போதும் முன்வைக்கின்றார்.

*“தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்குத்தான் மாற்றுக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அரசின் ஆதரவுடன் களமிறக்கப்பட்டுள்ளன”* என்ற அவரது ‘துரோகி’ பாணிக் குற்றச்சாட்டு தமிழ் மக்களின் காதில் மீண்டும் ஒரு தடவை பூச்சுற்றும் அவரின் நரித் தந்திரமன்றி வேறில்லை.

நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி போன்றவையும் –

பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், சந்திரகுமார் தலைமையில் கேடயம் சின்னத்தில் களமிறங்கியுள்ள சுயேச்சைக்குழு பேன்றவையும் –

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இம்முறை களத்தில் சில, பல நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடிய தரப்புகள்.

ஆனால், இவை எவையும் அரசின் – ஆளும் தரப்பின் – ஆதரவுடன் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டவை அல்ல.

அதேபோன்றுதான் வடக்கு, கிழக்கில் ஐ.தே.க.,சஜித் அணி, சு.க. போன்றவையும் கூட அரசின் ஆதரவுடன் திட்டமிட்டு வடக்கில் களமிறக்கப்பட்டவை அல்ல.

உண்மையில் யாழ் குடாநாட்டில் களமிறக்கப்பட்ட சுயேச்சைக் குழுக்களில் இரண்டு சம்பந்தன் ஐயாவின் தமிழ்க் கூட்டமையைச் சேர்ந்த சிவஞானம் சிறிதரனின் வழிகாட்டலில் குதித்தவை.

எனவே, தமக்கு எதிராகக் களத்தில் நிற்கும் தரப்புகளை அரசின் ஆதரவுடன் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டவை என்ற சம்பந்தனின் கருத்து அபத்தமானது. சிறுபிள்ளைத்தனமானது. தமிழ் மக்களை தவறாக வழிநடத்தும் விஷ எண்ணம் கொண்டது.

இது தமிழ் மக்களுக்கு நன்கு புரியம்.

# தமிழ்மக்கள் சிறுபான்மை இனமல்லர்; தேசிய இனம்

### கூறுகிறார் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

தமிழ் மக்களைத் தமிழ் அரசியல்வாதிகளில் பலர் கூட சிறுபான்மை இனம் என்றே விழிக்கும் நிலை காணப்படுகின்றது. சம்பந்தன் ஐயா கூட பல இடங்களில் சிறுபான்மை இனம் எனச் சொல்லிக் கொண்டு வந்தார். உண்மையிலே தமிழ் மக்களை ஒரு சிறுபான்மை இனமாகக் கொள்வதா அல்லது தேசிய இனமாக கொள்வதா என்கிற விவகாரம் 70 களிலேயே தீர்க்கப்பட்ட விவகாரம் எனக் கருத்து தெரிவித்தார் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த அரசியல் கூட்டமொன்றில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜதுரை பேசும் போது தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம். அவர்கள் உரிமைக்காக போராடுகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

அதற்கடுத்து பேசியவர் அன்றைக்கு தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியஸ்தராக இருந்த வரதராஜப் பெருமாள். அவர் பேசும் போது அண்ணன் ராஜதுரை கூறுவது தவறு. தமிழ் மக்கள் சிறுபான்மையினம் அல்லர். தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம். தமிழ் மக்கள் உரிமைக்காக போராடவில்லை. அவர்கள் தங்கள் விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பிறகு அமிர்தலிங்கம் பேசினார். தம்பி வரதன் சொல்வது தான் சரி. தமிழ் மக்கள் சிறுபான்மையினமல்லர். தேசிய இனம். அவர்கள் உரிமைக்காகப் போராடவில்லை. தங்கள் விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி என்றாலும் சரி, முக்கிய தலைவர்கள் என்றாலும் சரி, முக்கிய வெளியீடுகள் என்றாலும் சரி சிறுபான்மையினம் என்கிற விடயம் அகற்றப்பட்டு தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்கிற விடயம்தான் முன்னுக்கு கொண்டு வரப்பட்டது.

அதுவும் தமிழரசுக் கட்சியின் உத்தியோக பூர்வ பத்திரிகையாக இருந்த சுதந்திரன் பத்திரிகையின் அடிப்பக்கத்தில் தமிழ் சிறுபான்மையினத்தின் உரிமைக்குரல் என்று தான் வந்தது.

முற்றவெளிக் கூட்டத்துக்கு பிறகு தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக் குரல் என சுதந்திரன் பத்திரிகையின் அடி வரி மாற்றப்பட்டது.

ஆகவே இது 70 களில் தீர்க்கப்பட்ட பிரச்சினை. அன்று தீர்க்கப்பட்ட பிரச்சினையைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் இப்போதும் சொல்லிக் கொண்டு வருகின்றார்கள் என்று சொன்னால் இவர்களை எப்படி திரும்பவும் தமிழ் அரசியல் தலைவர்கள் என்று ஏற்றுக் கொள்வது என்கிற கேள்வி இங்கே வருகின்றது.

சிறுபான்மையினம் என்று சொல்லும் போது எங்களுக்கு பல நெருக்கடிகள் வருகின்றன. இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்பினை ஏற்றுக் கொள்கின்றோம் என்று வந்துவிடும். அப்படி வந்தால் சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்களை எங்களால் கோர முடியாது போய் விடும். இது மிகவும் முக்கியமான விவகாரம்.

நாங்கள் சிறுபான்மையினமல்லர். தனியான ஒரு தேசம். நாங்கள் விடுதலைக்காகப் போராடுகின்றோம் என்கிற அந்தக் கருத்து நிலையை மக்கள் மத்தியில் பேசுபொருளாக்கி கொண்டு செல்லும் செயற்பாட்டை கட்டாயம் செய்ய வேண்டும். ஊடகங்களும் அதில் வலுவான கவனத்தை குவிக்கவேண்டும்.–என்றார்.

# வவுனியா மின்சார சபையில் இன்று குவிந்தனர் மக்கள்!

### இரண்டு மின்சாரப் பட்டியல் வழங்கி அதிக கட்டணம் அறவிடுவதாக குற்றச்சாட்டு



வவுனியா, ஜூன் 25

வவுனியாவில் மின்பாவனையாளர்களுக்கு இரண்டு மின்சாரப் பட்டியல் வழங்கி அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவதாக அங்கு இன்றுவருகைதந்தபாவனையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கொவிட் – 19 தாக்கம் காரணமாக நாடு முடக்கத்தில் இருந்த காலப்பகுதியில் மின்சார சபையால் ஒரு மின்சாரப் பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. அதில் முன்னைய மாத மின்பட்டியல் தொகையே அடுத்த மாதத்திற்கும் போடப்பட்டிருந்தது. அதனை பலர் செலுத்தியும் விட்டனர் எனப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்போது மீண்டும் ஒரு மின்சாரப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அதில் மூன்று மாத மின்பட்டியல் எனக் கூறி அறவீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஒரு மாத மின்பட்டியல் தரப்பட்ட நிலையில் மீண்டும் அந்த மாத்துக்கும் சேர்ந்து மின் பட்டியல் வழங்கி மின்சார சபை மக்கள் பணத்தைச் சுரண்டுவதாகவும், இதன் காரணமாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதான மின் பொறியிலாளர் திருமதி மைதிலி தயாபரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

மின்சார சபையால் நாடு முடக்கத்திற்குள் இருந்த காலப்பகுதியில் தற்காலிகமாக ஒரு மின்சாரப்பட்டியல் வழங்கப்பட்டது. அதில் முன்னைய மாத மின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உத்தேச அறவீடே போடப்பட்டது. தற்போது மின்மானியில் உள்ளவாறு 3 மாதத்திற்கான மின் பட்டியல் வழங்கப்படுகின்றது. அதனால் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தேச மின் பட்டியல் பணத்தை செலுத்தத் தேவையில்லை. அது நீக்கப்பட்டுள்ளது. அதற்காகவே புதிய பட்டியலில் அத் தொகை இணைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முன்னைய உத்தேச பட்டியலுக்கு பணம் செலுத்தியவர்களின் தொகை தற்போதைய பட்டியலில் கழிக்கப்படும் – என்றார்.



# சிறையில் இறந்தவர்களுக்கு நீதிகோரி மக்கள் குவிந்தனர் மருத்துவமனையில்

இந்தியாவின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாத்தான்குளத்தில் கடை நடத்தி வந்த இருவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த போது அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

ஜெயராஜ் (வயது58), அவரது மகன் பென்னிக்ஸ் (வயது 31) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். பொலிஸார் கொடூரமாகத் தாக்கியதால்தான் அவர்கள் உயிரிழந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த நிலையில் இவர்களது உடல்கள் பிரேத பரிசோதனைக்காகத் திருநெல்வேலி அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டன. இதைத் தொடர்ந்து ஜெயராஜின் 3 மகள்கள் உள்ளிட்ட உறவினர்களும், அந்தப்பகுதி வர்த்தகர்கள் பலரும் நேற்றுப் பகல் அங்கு திரண்டனர்.

இதனால் அங்கு பதற்றம் நிலவியது. ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். தந்தை, மகன் கொல்லப்பட்ட விவகாரத்தில் தொடர்புடைய பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யும் வரை உடல்களைப் பெற மாட்டோம் என்று உறவினர்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்றம் நீடித்தது.

## பொலிஸாரைக் கைது செய்யக்கோரி நாளை தமிழகம் தழுவிய போராட்டம்



சாத்தான் குளத்தைச் சேர்ந்த தந்தை, மகன் இருவரையும் சிறையில் அடித்துக் கொன்றதாகக் குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கின்ற பொலிஸாரைக் கைது செய்ய வேண்டுமெனக் கோரி நேற்றுக் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து சாத்தான்குளம், வைகுண்டம் பகுதிகளிலும் கோவில்பட்டி, திருச்சந்தூர் பகுதிகளிலும் கடைகள் முழுமையாக அடைக்கப்பட்டிருந்தன. திருநெல்வேலி, மயிலாடுதுறை மாவட்டங்களிலும் பெரும் எண்ணிக்கையிலான கடைகள் மூடப்பட்டிருந்தன.

அத்தோடு நாளை தமிழகம் தழுவிய போராட்டத் துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் கே.பாலகிருஸ்ணன் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். மாவட்ட ஆட்சியர், கோட்ட மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு முன்பாக, ஊரடங்கு நடைமுறையில் உள்ள மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இந்தப் போராட்டம் நடைபெறும் என்றும் அவர் மேலும் கோரியிருக்கிறார்.

கொரோனாத் தொற்று அதிகரிக்கக் கூடிய சூழலில் தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடித்து முகக்கவசம் அணிந்து கட்சி உறுப்பினர்களும் பொது மக்களும், வர்த்தகர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

## ரூ.10 லட்சமும் அரச வேலையும் வழங்கப்படும் என்கிறார் முதல்வர்




சாத்தான் குளத்தில் கடை வைத்திருந்த தந்தை - மகன் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுச் சிறையில் உயிரிழந்த நிலையில் அவர்களது குடும்பத்தினருக்குத் தலா பத்து லட்சம் ரூபா(இந்திய மதிப்பில்) அளிப்பதாகவும் குடும்பத்தில் ஒருவருக்கு அரச வேலை வழங்குதாகவும் தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்தார்.

தந்தை -மகன் சிறையில் அடுத்தடுத்து உயிரிழந்ததையடுத்து அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை, இந்த வழக்கைத் தானாக முன்வந்து விசாரித்தது.

மாநில மனித உரிமை ஆணையகமும் இதுகுறித்து அக்கறை செலுத்துகிறது. இந்த நிலையிலேயே முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ரெஹானா பாத்திமா மீது பாய்ந்தது போக்ஸோ!



அரை நிர்வாண உடலில் ஓவியம் வரைந்து அதை வெளியிட்டதற்காக பெண்ணிய ஆர்வலர் என்று அறியப்படுகின்ற ரெஹானா பாத்திமா மீது போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனது பிள்ளைகளைக் கொண்டு தனது அரை நிர்வாண உடலில் ஓவியம் வரைந்து, 'உடல் அரசியல்' என்ற தலைப்பில் அது குறித்த காணொலியைத் தனது முக நூலில் வெளியிட்டிருந்தார் ரெஹானா பாத்திமா. அந்தப் பதிவில் ஆண்,பெண் உடல் குறித்த கருத்துக்களையும் அவர் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், தனது குழந் தைகளை வைத்து அரை நிர்வாண உடலில் எவ்வாறு ஓவியம் வரையலாம், இது குழந்தைகள் பாலியல் சீண்டல்கள் என்று பல்வேறு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து, அவர் மீது தகவல் தொழில்நுட்பச் சட்டத்திலும், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைச் சட்டமான போக்ஸோ சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு அளித்தன.

இதுகுறித்து விசாரணை நடத்தி வருவதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. 2018ஆம் ஆண்டு சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் இருமுடிகட்டி நுழைந்தவர் ரெஹானா பாத்திமா என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘இ - பாஸ்’ கட்டாயம்

தமிழகத்தில் கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுக்கும் வகையில், இன்று முதல் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வதற்கு ‘இ - பாஸ்’ கட்டாயம் என்று தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

தமிழகத்தில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில் இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காகத் தமிழ்நாடு அரசு ஊரடங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது. வாகனப் போக்குவரத்தில் மண்டல முறை நடைமுறையில் உள்ளதால், மண்டலங்களின் பிற மாவட்டங்களில் இருந்து இ-பாஸ் இல்லாமல் வருபவர்களுக்கு நோய்த்தொற்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கும்.

எனவே, வாகனப் போக்குவரத்தில் மண்டல முறைக்குப் பதில், இ - பாஸ் இல்லாமல், மாவட்டத்துக்குள் மட்டும் செல்லவும், வேறு மாவட்டங்களுக்குச் செல்லவோ, பிற மாவட்டங்களில் இருந்து வரவோ இ - பாஸ் பெற்றுப் பயணம் செய்யவும் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## போலி ‘இ - பாஸ்’ 5 பேர் கைது

ஊரடங்கைப் பயன்படுத்திப் போலி இ.பாஸ் வழங்கிய அரச அதிகாரிகள் இருவர், கார் ஓட்டுநர்கள் 3 பேர் என 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் முழு ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் இ - பாஸ் நடைமுறைப்படத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில் வாகன ஓட்டுநர்களான காஞ்சிபுரம் திருவாஞ்சேரியைச் சேர்ந்த மனோஜ்குமார் (வயது31), அம்பத்தூர், மேனாம்பேடைச் சேர்ந்த வினோத்குமார் (வயது32), அம்பத்தூர் கள்ளிக்குப்பத்தைச் சேர்ந்த ஜி.எம்.தேவேந்திரன் (வயது 33) ஆகியோரிடம் பணத்தைப் பெற்ற அரச ஊழியர்களான எம்.கே.பி நகரைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக இளநிலை உதவியாளர் உதயகுமார் (வயது 34), புளியந் தோப்பைச் சேர்ந்த வட்டாட்சியர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் குமரன் (வயது 35) ஆகியோர் அந்த ஓட்டுநர்களுக்கு இ.பாஸ் வழங்கியுள் ளனர். இதனால் மேற்படி நபர்கள் ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.

## இந்தியாவும் தூதர்களை குறைத்தாக வேண்டும்

**பாகிஸ்தான் பதிலடி**

பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதரக ஊழியர்களின் எண்ணிக்கையை இந்தியா குறைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

இந்தியத் தலைநகர் டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக ஊழியர்களின் எண்ணிக்கையை 7 நாள்களுக்குள் அரைவாசியாக் குறைக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரக உயர் அதிகாரியைப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் நேரில் அழைத்து அங்குள்ள இந்தியத் தூதரக ஊழியர்களின் தொகையையும் அரைவாசியாகக் குறைத் துக்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

# கலைக்கப்பட்டது சிங்கப்பூர் நாடாளுமன்றம்



## மிக விரைவில் தேர்தல்

சிங்கப்பூர், ஜூன் 25

சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலிமா யாகோப் கடந்த செவ்வாய்க்கிழமையன்று சிங்கப்பூர் நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

இதையடுத்து அங்கு தேர்தல் நடக்கும் என்றும் அதற்குரிய திகதி விரைவில் வெளியிடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வேட்பு மனுத்தாக்கல் இந்த மாத இறுதிக்குள் நடந்துவிடும் என்று அந்த நாட்டின் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கொரோனாத் தொற்று நிலைமை ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது என்றும், தேர்தலுக்குப் பிறகு, புதிய அரசாங்கம் தேசிய நிகழ்ச்சி நிரலில் கவனம் செலுத்திக் கொரோனா வைரஸ் தொற்று நோய், பொருளாதாரம் மற்றும் வேலைகள் ஆகியவற்றைக் கையாளுதல், எடுக்க வேண்டிய முடிவுகள் ஆகியவற்றில் கவனம் செலுத் தும் என்றும் சிங்கப்பூரின் பிரதமர் லீ ஹ்சியன் லூங் தெரிவித்தார்.

# இஸ்லாமபாத்தில் கிருஷ்ணர் கோயில்



பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கிருஷ்ணர் கோயில் கட்டப்படுகிறது. இஸ்லாமாபாத்தில் அமையும் முதலாவது இந்துக் கோயில் என்ற பெருமையை இது பெறும்.

இஸ்லாமபாத்தின் எச் - 9 என்ற பகுதியில் 20 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இந்தக் கோயிலைக் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மனித உரிமைகளுக்கான பாகிஸ்தானின் நாடாளுமன்றச் செயலர் லால் சந்த் மால்ஹி இந்தக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார்.

அப்போது அவர் பேசும்போது, 1947ஆம் ஆண்டுக்கு முன் இஸ்லாமபாத்திலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் ஏராளமான இந்துக் கோயில்கள் இருந்தன. வழிபட ஆளில்லாமல் காலப் போக்கில் அவை கைவிடப்பட்டன. கடந்த 20 ஆண்டுகளில் இஸ்லாமாபாத்தில் இந்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வழிபடுவதற்குக் கோயில் தேவை என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றார். இந்தக் கோயிலைக் கட்டிமுடிப்பதற்கு 10 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கோயில் கட்டுவதற்கு சிறப்பு மானியம் ஒதுக்குமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொரோனாத் தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு ஏற்றி சோதனை

## பிரிட்டனில் முதற்கட்டம் முடிவு





கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை மனிதர்களுக்குச் செலுத்திப் பரிசோதிக்கும் பணி பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மருந்தைத் தங்கள் உடலில் செலுத்திப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள விருப்பம் தெரிவித்த தன்னார்வலர்கள் சிலருக்கு முதற்கட்டமாக இந்தத் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டது.

அடுத்த சில வாரங்களில் 300 பேருக்கு இந்த மருந்து செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. லண்டன் இம்பீரியல் கல்லூரிப் பேராசிரியர் ராபின்ட்டாக் தலைமையிலான குழுவினர் இந்தப் பரிசோதனையை நடத்துகிறார்கள். இதற்கு முன்னர் விலங்குகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் இந்தத் தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்றும், பயனுள்ள வகையில் நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுகின்றது என்றும் உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்தே இதை மனிதர்களுக்குச் செலுத்துகின்ற பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இந்த ஆராய்ச்சிக் குழுவினர் தெரிவித்தனர். இந்தப் பரிசோதனையின் அடுத்த கட்டமாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆயிரம் பேருக்கு இந்த மருந்து செலுத்திப் பரிசோதிக்கப்படவுள்ளது என்றும் இந்தப் பரிசோதனைகள் வெற்றியளித்தால், பிரிட்டனிலும் பிற நாடுகளிலும் இந்தத் தடுப்பு மருந்து 2021ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே கிடைத்துவிடும் என்றும் தெரிவித்துள்ளது இந்த ஆய்வுக்குழு.

# உயிரிழப்பு உயர்வு!

மெக்சிக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்தது.

7.4 ரிக்டர் ஆகப் பதிவாகியிருந்த இந்த நிலநடுக்கம், மெக்சிக்கோவின் தென்பகுதியில் ஒக்ஸாக்கா மாகாணத்தில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் பலர் காயமடைந்திருந்த நிலையில் 6பேர் உயிரிழந்தமை உடனடியாக அறியப்பட்டது.

இந்த நிலையிலே பிந்திக் கிடைத்த தகவல்களின்படி அங்கு 10பேர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் இரண்டு வாரங்களுக்குள் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டு அவற்றில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மெக்சிக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சேதமடைந்த ஒரு கட்டடம் இது. 2017 ஆம் ஆண்டு இதே பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஏற்கனவே சேதமடைந்திருந்த இந்தக் கட்டடம் தற்போது மறுபடியும் சேதமடைந்திருக்கிறது.

# ஒட்சிசன் கருவி பற்றாக்குறை!

கொரோனா பாதிப்பு உலகளவில் 1 கோடியை எட்டும் நிலையில் உலக நாடுகளிடம் ஒட்சிசன் கான்சன்ட்ரேட்டர் கருவிகள் பற்றாக்குறை ஏற்படும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது. இதுகுறித்து உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்ததாவது: -

உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 கோடியை எட்டும் நிலையிலுள்ளது. இந்தச் சூழலில் தற்போது உலக நாடுகள் ஒட்சிசன் கான்சன்ட்ரேட்டர் கருவி (காற்றில் இருக்கும் நைதரசனைப் பிரித்து, ஒட்சிசனை மட்டும் நோயாளிகளுக்கு அளிக்கும் கருவி) பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன. சுவாசிப்பதில் சிரமம் கொள்ளும் நோயாளிகளுக்கு உதவுகின்ற இந்தக் கருவிகளின் பற்றாக்குறையை நீக்க சுமார் 14ஆயிரம் ஒட்சிசன் கருவிகளை 120 நாடுகளுக்கு வாரங்களில் வழங்கவுள்ளோம் என்று தெரிவித்துள்ளது.





# காஞ்சிரமோட்டை மக்கள் மீள்குடியேற வனவள அதிகாரிகள் முட்டுக்கட்டை!

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 25

காஞ்சிரமோட்டை கிராம மக்களின் மீள்குடியேற்றத்துக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுகின்றனர் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளரும், அந்தக் கூட்டணியின் வன்னி மாவட்ட தலைமை வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் வாழ்வுரிமையை பறிக்கும் வனவள அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிரமோட்டை மற்றும் நாவலர் கிராம மக்கள் அனைவரும் தாங்கள் மீளக்குடியமர வனவள அதிகாரிகள் தடையாக இருக்கின்றனர் எனத் தெரிவித்து 21.06.2020 முதல் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர்.

காஞ்சிரமோட்டை மற்றும் நாவலர் கிராமம் ஆகிய இரு கிராமங்களும்தமிழ் மக்கள் பூவீகமாக வாழ்ந்துவரும் கிராமங்களாகும். இந்தக்கிராமத்தில் 1947ஆம் ஆண்டில் இருந்து அந்த மக்கள் வசித்து வருகின்றார்கள்.

இப்பகுதி மக்கள் பல தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் அந்தக் கிராம மக்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக, கைவிடப்பட்ட தமது காணிகளில் வாழ்வாதாரத்திற்காகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கும் வனவள திணைக்கள அதிகாரிகள் தடை போட்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி அவர்கள் தமது சொந்த நிலங்களில் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எதிராக நீதிமன்றத்தில் அந்த மக்களை நிறுத்துவதற்கான முயற்சிகளை வனவளத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுக்கின்றனர்.

அந்தக் கிராம மக்களுக்கான வீதி புனரமைப்பு மற்றும் கிராமத்துக்கான மின் இணைப்பு ஆகியவற்றை வனவள திணைக்களத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். இந்தக் கிராம மக்களின் மீள்குடியேற்றத்தை வனவளத் துறையினர் தடுக்கக்கூடாது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் அந்தத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வனவள திணைக்களம் தடுக்கிறது.

யுத்தகாலத்தில் பல இழப்புக்களை சந்தித்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி தமது காணிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கும் காணிகளைத் துப்பரவு செய்வதற்கும் அவர்களுக்கான வீதி புனரமைப்பு மற்றும் மின் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியிருக்கின்ற நிலையில் வனவளத் திணைக்களத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மனிதாபிமானத்தினைக் குழிதோண்டி புதைத்து அதிகார மிலேச்சத்தனத்தினையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆகவே அதிகாரிகளின் இவ்விதமான முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சர்கள், அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியபோதும் அவை பராமுகமாக இருந்துவருவதால்ஜனாதிபதிஉடனடியாக இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

# மத்திய அமைச்சால் தப்பியது அக்கராயன் வைத்தியசாலை

## மக்கள் கோரிக்கைக்குச் செவி சாய்த்தது கொழும்பு

**வவுனியா செய்தியாளர் கி.வசந்தரூபன்**

**முல்லைத்தீவு, ஜூன் 25**

**அக்கராயன் பிரதேச வைத்தியசாலையை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகள் சிலரின் நடவடிக்கைக்கு மத்திய சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது.**

வடக்கில் அக்கராயன்குளம் வைத்தியசாலையைக் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் முடிவைக் கைவிடுமாறு வடக்கின் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரவணபவன் பொதுமக்களால் வழங்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மாவட்ட அரச அதிபரினால் வழங்கப்பட்ட அறிக்கை என்பவற்றுடன் தமது பிரத்தியேக அறிக்கையையும் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளிடம் நேரில் சென்று கையளித்து விளக்கம் அளித்தமையை அடுத்தே மத்திய சுகாதார அமைச்சு இந்த முடிவைக் கைவிடத் தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அக்கராயன்குளம் வைத்தியசாலையை கொரோனா சிகிச்சை மையமாக மாற்றும் முடிவைத் தன்னிச்சையாக வடக்கில் உள்ள சில உயரதிகாரிகளே எடுத்தனர் எனவும், தமக்கும் அந்த முடிவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எனவும், இம்முடிவினால் மக்கள் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள் குறித்து கிளிநொச்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் ஊடாக ஏற்கனவே தாம் அறிந்திருந்தார் என்றும், இருப்பினும் வடக்கின் சில உயரதிகாரிகளே முடிவை மாற்றாது அழுங்குப்பிடியாகச் செயற்பட்டனர் என்றும், மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகாரிகள் தெளிவாக தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அக்கராயனில் அமைய உத்தேசித்த கொரோனா வைத்தியசாலைக்குப் படையினரை பாதுகாப்பு வழங்கக் கோரும் அளவுக்குக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மும்முரமாக இவ்விடயத்தில் ஈடுபட்டதும், பணிப்பாளருக்கு அவ்வாறு எல்லை கடந்து செயற்படுவதற்குரிய முழு அதிகாரங்களையும் வழங்கியிருந்தவர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரே என்றும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகவே மக்களின் உணர்வுகளுக்கு மாறாகச் சில அதிகாரிகள் செயற்படுமளவுக்கு நிலைமைகள் சென்றது எனவும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் சில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மக்களுக்கு ஏற்படவுள்ள நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு செயற்பட்டதன் காரணமாக அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த 15 கிராமங்களை உள்ளடக்கிய 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொடர்ச்சிய தங்களின் மருத்துவ சேவையைத் தடையின்றி பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

# மத்திய வங்கியின் நிதிச் சபைகள் உறுப்பினர்கள் இருவர் நியமனம்

கலாநிதி ராணி ஜயமக மற்றும் சமந்த குமாரசிங்க ஆகியோர் மத்திய வங்கியின் நிதிச் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பு பேரவை சபாநாயகரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் கூடியது.

முன்னாள் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தேர்தல் காலத்தில் ஊடகங்களில் பொதுவாக அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க இதன் போது தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

சித்திரப்போட்டி

தினம் ஒரு தலைப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

நாளைய (26.06.2020) தலைப்பு
மாட்டு வண்டில்

சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல்முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த ஆட்சி அதிகாரம் மிக அவசியம்

## இளைஞர்களுடனான சந்திப்பில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

**நாட்டைப் புதுப்பிக்கக் கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமேயாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆட்சி அதிகாரம் அத்தியாவசியமானதாகும். யாரும் பின்னடையத் தேவையில்லை. அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படுங்கள்.**

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்சியைப் புதிய சந்ததியினருக்காகக் கட்டியெழுப்புவதைப் போன்று நாட்டையும் இளம் சந்ததிக்காகக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்களுடன் நடத்திய விசேட சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியே பல புதிய வேட்பாளர்களைக் களமிறக்கியிருக்கின்றது. இளைஞர்கள் புதுமுகங்களை எதிர்பார்த்துள்ளனர். பழைய அரசியல்வாதிகளுடைய செயற்பாடுகளில் அவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் பெருமளவான புதுமுகங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கட்சியும் புதிதாகியுள்ளதோடு புதிய வேலைத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசியலிலிருந்து விலகிய இளைஞர்களை மீண்டும் இணைத்துக்கொள்வது எமது பிரதான பொறுப்பாகும். அதனுடன் முன்னோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாம் ஆட்சியிலிருந்தபோது பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களை இளைஞர்கள் புறக்கணிக்கின்றனர். அபிவிருத்திகள் மாத்திரமின்றி புதிய திட்டங்களும் அவர்களது தேவையாகவுள்ளது. எம்மால் முன்னெடுக்கப்பட்ட விசேட வேலைத்திட்டங்களில் நாடாளுமன்ற செயற்பாடுகளைத் தொலைக்காட்சியூடாக மக்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் நாடாளுமன்ற அமர்வுகள் பற்றி இளைஞர்கள் திருப்தியடையவில்லை.

நாம் மாற்று வழியொன்றை முன் வைக்கவில்லை என்று இளைஞர்கள் எண்ணினார்கள். அதில் உண்மை உள்ளது.

அதன் பிரதிபலன் யாதெனில் அரசியலில் முற்றாக தொடர்பற்ற நபர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். எம்மால் களமிறக்கப்பட்டுள்ள புதிய வேட்பாளர்களில் கல்வி கற்றவர்களே அதிகமாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பற்றி நாம் பேசப்போவதில்லை. எமக்கு மாற்றம் தேவைப்படுகின்றது. அதற்கு ஆட்சி அதிகாரம் அவசியமாகும். மாற்றத்துக்கான யோசனைகளை நாம் முன்வைக்கின்றோம். அதற்காக வாக்களித்ததன் பின்னர் விருப்பு வாக்கை வழங்குங்கள். மக்களின் குரல்களுக்கு நாம் செவிசாய்ப்போம்.

நாம் புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம். இத்தோடு நாம் நின்றுவிடப் போவதில்லை. இளைஞர்களுடன் இணைந்து கட்சியை புதிதாக்குவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்கு பெரும் ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

கட்சியைப் புதிய சந்ததியினருக்காகக் கட்டியெழுப்புவதைப் போன்று நாட்டையும் இளம் சந்ததிக்காகக் கட்டியெழுப்புவோம். இதுவே எமது இலக்காகும். யாரும் பின்னடையத் தேவையில்லை. அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படுங்கள். அந்தப் பொறுப்பை புதிய தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டும். அது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கல்ல. கட்சியைப் புதுப்பிப்பதற்காகும்.

நாட்டைப் புதுப்பிக்கக் கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். பழைய முறைமையைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அளவு நபர்கள் இருக்கின்றனர். இளைஞர்களால் புறக்கணிக்கப்பட்ட முறைமையிலேயே தொடர்ந்தும் இருக்க முடியாது. இதேபோன்று நவீன தொழிநுட்பமும் மேம்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

---

## வேம்படி மகளிர் பாடசாலையில் இன்று கிருமித் தொற்று நீக்கம்





யாழ்ப்பாணம், ஜூன் 25

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை வளாகத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இரண்டாவது நாளாக இன்று முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் இந்தப் பணி யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டது

3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 5 கட்டங்களாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதன்படி வரும் 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்ப வேண்டும்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் நேற்று புதன் கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் பணியாக யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் சிறப்பு அதிரடிப் படையினரால் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

---

## யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்துக்கு மின் கட்டணத்தை யார் செலுத்துவது?

கட்டி முடிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் இன்னும் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படாமல் இருக்கும் கலாசார மண்டபத்துக்கான மின்சாரக் கட்டணத்தைச் சபைதான் செலுத்தவேண்டுமா என்பதை உறுதி செய்யுமாறு உறுப்பினர் ந.லோகதயாளன் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாநகர சபைக்காக இந்திய அரசின் நிதி உதவியில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கலாசார மண்டபத்துக்கு ரியமின்சாரக்கொடுப்பனவாக 34 லட்சத்து 26 ஆயிரத்து 751 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மாதாந்தம் பல லட்சம் ரூபாவாக இக்கட்டணம் உயர்ந்து வருகின்றது. ஆனால் இந்திய – இலங்கை அரசுகள் செய்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டடம் கையளிக்கப்படும்வரை மாநகர சபை இதனைச் செலுத்த தேவையில்லை. ஆனால் இணைப்புகளுக்கான கொடுப்பனவு மட்டுமே செலுத்தப்பட வேண்டும்என்றே கூறப்படுகின்றது.

இதன் காரணமாக ஒப்பந்தம்பரிசீலிக்கப்பட்டுஅதன் முடிவைச் சபைக்கு வழங்க வேண்டும் என்றார்.

இந்த விடயம் தொடர்பாக 2016 இல் இருந்தே மின் கட்டணத்தைச் சபை வழங்குவதாகவே அறிகின்றோம். எனவே மின் கட்டணம் தொடர்பாக மீண்டும் ஆராய்வதோடு முன்னாள் ஆணையாளர் பொ.வாகீசனிடமும் உரையாடி பதிலளிப்பார் என மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன் தெரிவித்தார்.

---

## லங்கா உப்பு நிறுவனத்துக்கு காலக்கெடு போட்ட கோட்டா

கொழும்பு, ஜூன் 25

நட்டத்தில் இயங்கும் லங்கா உப்பு நிறுவனம் இலாபத்தைச் சம்பாதிக்க ஜனாதிபதி கோட்டாபய ஒரு வருட காலஅவகாசம் வழங்கியுள்ளார்.

லங்கா உப்பு லிமிடெட் நிறுவனத்தின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்யும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய நேற்று கலந்துரையாடலை நிறுவன அதிகாரிகளுடன் நடத்தினார்.

இதன்போதே மேற்படி காலக்கெடுவை அவர் விதித்துள்ளார்.

2018 முதல் நஷ்டத்தில் இயங்கும் லங்கா உப்பு லிமிடெட் நிறுவனத்திற்கு இலாபத்தைச் சம்பாதிக்க ஒரு வருடம் கால அவகாசம் அளித்துள்ளேன்.

2016 ஆம் ஆண்டில் லங்கா சோல்ட் லிமிடெட் ஈட்டிய இலாபம் ரூ. 7 கோடி. 2017 இல் இது ரூ. 3.2 கோடி. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 28 இலட்சம் மற்றும் ரூ. ஒரு கோடி 9 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

இந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புக்கான காரணங்களை விசாரிப்பதற்கும், அந்த நிறுவனத்தை இலாபம் ஈட்டக்கூடிய ஒன்றாக மாற்றுவதற்கும் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு பொறுப்பேற்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன்.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (ஈபிஎப்) கீழ் உள்ள ஒவ்வொரு நிறுவனமும் இலாபம் ஈட்டுவது முற்றிலும் அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அடுத்த 6 மாதங்களுக்கும் அடுத்த ஆண்டுக்கும் தனித்தனியான உத்திகளை வகுக்குமாறு அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தினேன்.

உப்பு இறக்குமதியை முழுமையாக நிறுத்துவது அவசியம். லங்கா சோல்ட் லிமிடெட் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் செய்ததைப் போலவே மீண்டும் தங்கள் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன்.

நட்டத்துக்கான நொண்டிச்சாட்டுபொருத்தமற்றது என்பதையும், இலாபத்திற்கு வழிவகுக்கும் உத்திகள் குறித்து தான் அதிக ஆர்வம் காட்டுவேன் –என்றார் ஜனாதிபதி.

# மாமனிதர் ரவிராஜின் ஜனன தினம் யாழில்








யாழ்ப்பாணம், ஜூன் 25

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் 58 ஆவது ஜனன தினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.**

**தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள அவரது சிலையில் இந்த நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.**

**இந்நிகழ்வில் மறைந்த மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா, ரவிராஜ் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.**

**இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சிக் கிளைத் தலைவருமான சயந்தன், உள்ளூராட்சிச் சபை உறுப் பினர்கள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.**

# கருணாவின் கதை இரகசியமல்ல: அனைவருக்கும் தெரிந்த விடயமே

## இப்படிக் கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன் 25

கருணாவின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல. அனைவருக்கும் தெரிந்ததே.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சவால்களை எதிர்கொள்ள முடியாதவர் சிறந்த தலைவராக செயற்பட முடியாது. நாம் ஆட்சி அதிகாரத் தைப்பெறும்போதெல்லாம் சவால்கள் அதிகரித்ததாகவே இருந்தன. ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் தீர்க்க முடியாத பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டோம். தற்போதும் பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ள கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி வெற்றி பெற்றுள்ளோம்.

கருணா அம்மான் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்தை தற்போது எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரங்களுக்குப் முழுமையாகப் பயன்படுத்திக் கொள் கின்றார்கள். ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பலம் பெறுவதற்கு ஆயுதம் வழங்கிய நபர் தொடர்பில் கருத்துரைப்பது இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருக் கும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குச் சார்பாகச் செயற்பட்டது. சஜித்தின் தந்தை பிறேமதாஸ வால் பலம் வாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அந்த ஆயுதங்களைக் கொண்டே விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவத்தினரைக் கொன்றார்கள். கருணா அம்மா னின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல; அனைவரும் அறிந்ததே – என்றார்.

# யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோசகர் நீக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன் 25

யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோசகர் ஒருவர் சபையின் எதிர்ப்பு காரணமாக பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோசகராக சட்டத்தரணி ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் கடமை யாற்றி வந்தார்.

அவர் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் அவர் தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள், தனது முகநூல் உள்ளிட்டவற் றில், மாநகர சபை தொடர்பிலும், அதன் உறுப்பி னர்கள் தொடர்பிலும் கடுமையான விமர்சனங் களையும் அவதூறுகளையும் முன் வைக்கிறார் என சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டு, அவரை மாநகர சபை சட்ட ஆலோசகர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என கோரிக்கை முன் வைக்கப் பட்டது.

இதன்காரணமாக அவர் நேற்று யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோகர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிருலப்பனையில் சிப்பாய் தற்கொலை

கொழும்பு – கிருலப்பனை பொல்ஹென்கொட இராணுவ முகாமின் 22 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தற்கொலைக்கான காரணம் இதுவரை யில் கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ஊரடங்கை

## நீடிப்பதா? நீக்குவதா?

### சுகாதாரத் தரப்பின் கையில் முடிவு

இலங்கையில் ஊரடங்கு சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பாக சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமையவே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள ஜனாதி பதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் மொஹான் கரு ணாரத்ன, இந்த தகவலை வெளியிட்டுள்ளார். உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் இலங் கையிலும் அதிகரித்ததைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் முதல் கட்டம் கட்டமாக மற்றும் தளர்வுகளுட னான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மே மாதம் வரையில் நாட்டில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வந்த நிலையில், அண்மைக்கா லமாக இரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணிவரை யில் மாத்திரம் ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், நாட்டில் தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2001 ஆக அதி கரித்துள்ள போதிலும் இந்த தொற்று மக்கள் மத்தி யில் பரவுகின்றமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுபவர்களும் கடற்படையினருமே வைரஸ் தொற்றுக்கு இலக்காகின்றனர்.

இந்நிலையில், தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு நீடிக்குமா அல்லது தளர்த்தப்படுமா என்பது தொடர்பாக கேள்வி எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டமனாறு பாலத்தின் நீர் வெளியேறு பகுதியை புனரமைப்பதற்கு 42 லட்சம் ரூபா டக்ளஸ் ஒதுக்கீடு

பழுதடைந்துள்ள தொண்டமனாறு பாலத்தின் நீர் வெளியேறு பகுதியை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நீர் வெளியேறு பகுதியை புனரமைப்பு செய் வதற்காக 42 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டள்ள நிலையில் புனரமைப்பதற்கான கேள் விகள் தற்போது கோரப்பட்டுள்ளன. யாழ் மாவட்ட செய லகத்தினால் நீர்ப்பாசனத் திணைக் களத்தின் தொழி நுட்ப மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நீர் வெளியேறு பகுதியின் வேலைத் திட்டத்துக் குரிய மதிப்பீடு மாகாண நீர்ப்பாசனத் திணைக் களத்தி னால் தயாரிக்கப்பட்டு யாழ் மாவட்ட பிரதேச செயலகத் திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நிதி இலங்கையில் நாடளாவிய ரீதி யில் அமுல் படுத்தப்படுகின்ற களப்புகள், உள்நாட்டு நீர்நிலைகளின் நீர்ச்சூழல் தொகுதியின் பாதுகாப்பு மற் றும் அபிவிருத்தி செய்வதனூடாகவும் நீர் உயிரின வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட் டத்தின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனிடையே தற்போது உள்ள பாலத்தின் கீழ் போரின் போது தகர்க்கப்பட்ட பழைய பாலத்தின் இடிபாடுகள் இருப்பதால் தொடர்மழையின் போது நீரோட்டத்தை அது தடைசெய்கின்றது.

அத்துடன் கடும் காற்றின் போது படகுகள் பாலத் தின் மறு பகுதிக்கு கொண்டு வருவதற்கும் மீனவர்கள் பல பிரச்சுனைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். இதை யடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் இடிபாடுகளை அகற் றித்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2020 இல் வெளியிடப்பெற்றது.